மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எப்போது, என்பதைக்கூட பாநாயகருடைய அறையிலேதான் கேட்க வேண்டும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : அமைச்சர் அவர்கள் கூறுவதிலிருந்து அது வராது என்று தெரிகிறது.

THE HON. THIRU C. N. ANNADURAI : Even though the Deputy Speaker has given the assurance that there will be a discussion on this matter, if the Deputy Speaker thinks that, in view of the statement read out by the Minister, a further discussion is unnecessary, is it not within his right to refuse a discussion on the matter ?

THIRU S. BALASUBRAMANIAN : It is very well within his right and he can disallow a discussion. I am not standing in the way.

திரு. வி. கே. கோதண்டராமன் : விதி 41-ன் கீழ் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் ஒருவர், "நான் கொடுத்த தீர்மானம் என்ன ஆயிற்று" என்று கேட்பதைக்கூட அவையிலே கேட்கக்கூடாது. சபாநாயகருடைய அறையிலேதான் அதைப்பற்றிக் கேட்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் பல முறை கேட்டும் வராததாலே இந்த அவையிலே கேட்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்

அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை, குழுவின் தலைவர் திரு. கே. விநாயகம் அவர்கள் இந்தப் பேரவைக்கு அளிப்பார்கள்.

THIRU K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, I present the Third Report (Fourth Assembly) of the Committee on Government Assurances for the year 1968-69.

7. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும். இப்பொழுது திரு. கா. மு. கதிரவன் அவர்கள் பேசுவார்கள்.

***திரு. கா. மு. கதிரவன் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசின்மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் தீர்மானத்தின் மீது அவர் விளக்கங்களைக் கொடுத்தபொழுது, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அவ்வப்போது அதற்குரிய பதில்களை அளித்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகின்ற வாய்ப்பை இந்த அவை எனக்கு அளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.